# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியின் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் 28.03.2022 ஆம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகர் மன்ற தலைவர் தலைமையில், நகராட்சி நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைப்பெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டநடவடிக்கை பொருள்கள்

**பொருள் எண். 01**

கள்ளக்குறிச்சி நகராட்சியினை கடந்த 25 ஆண்டுகளுக்கு பின்பு மாபெரும் வெற்றிபெற வாய்ப்பு அளித்த கழகத்தின் காவலர், கழகத்தின் மாடலாட்சி, மக்களின் நல்லாட்சி, உலகமெல்லாம் புகழும் உண்னத முதல்வர், கழகத்தின் தலைவர், தமிழகத்தின் மக்கள் முதல்வர் அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

கள்ளக்குறிச்சி மாவட்ட அமைச்சர், ஈகையில் கர்ணன், வீரத்தில் பீமன், வித்தையில் அர்ச்சுணன், அமைதியில் தர்மர், விவேகத்தில் விதுரர் மொத்தத்தில் கள்ளக்குறிச்சி மாவட்ட திருவண்ணாமலை தீபம் மாண்புமிகு. ஐயா. எ.வ.வேலு அவர்கள், பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலை துறை மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் அவர்களுக்கு எங்களை வெற்றி பெற வைத்தமைக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் சிறப்பாக செயல்பட்டு மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்களுக்கும் நன்றி! நன்றி!! நன்றி!!!

கள்ளக்குறிச்சி நகராட்சியினை மீட்டெடுத்த மாவட்ட விடிவெள்ளி, மாண்புமிகு தலைவர் தளபதியார் முதல்வர் அவர்களின் போர்வாள், நகராட்சி மன்றத்தினை வழிநடத்த போகும், நடுநிலையாளர், மரியாதைக்குறிய வசந்தம். க.கார்த்திகேயன் B.Sc., MLA மாவட்ட கழக செயலாளர் (தெற்கு) ரிஷிவந்தியம் சட்ட மன்ற உறுப்பினர் அவர்களுக்கும் கோடான கோடி நன்றி! நன்றி!! நன்றி!!!

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நன்றி பாராட்டி தீர்மானம் பதிவு செய்ய அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 883/2022/இ1)**

**பொருள் எண். 02**

கள்ளக்குறிச்சி நகராட்சிஎல்லைக்குட்பட்டஅனைத்து வார்டு பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டு குடிநீர் திட்டத்தின் வாயிலாக6 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் நிரப்பப்பட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பபட்டு வருகிறது. எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடிய இயற்கை இடற்பாடுகளால் மின்தடைகள், குடிநீர்குழாயில் உடைப்புகள் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் குறைதல்ஆகிய காரணங்களின் அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் தடைபடும் காலங்களில், அதனை ஈடுசெய்யும் வகையில் பொது மக்களுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக கள்ளக்குறிச்சி பொதுப்பணி துறையின் கட்டுபாட்டில் உள்ள ஏரிகளில், இந்நகராட்சியின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில், புதியதாக திறந்தவெளி கிணறுகள் அமைப்பதற்கும், அத்துறையின் தடையில்லா சான்று பெறுவதற்கும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் புதியதாக திறந்தவெளி கிணறுகள் அமைப்பதற்கு அத்துறையின் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 884/2022/இ1)

**பொருள் எண். 03**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில், அடிப்படை வசதி பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் முக்கியமானதாக குடிநீர் வழங்கல் பணி உள்ளது. கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மணலூர்பேட்டை மற்றும் ரிஷிவந்தியம் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நகராட்சிக்கு சொந்தமான 6 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு தினசரி 2.93 MLD குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது

பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் விநியோகத்தினை, தங்கு தடையின்றி வழங்கிட ஏதுவாக, கீழ்க்காணும் பகுதிகளில் திறந்தவெளி கிணறுகள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியாகிறது.

1. கோமுகி ஆறு (சிறுவங்கூர் சாலை) தடுப்பனை அருகில்
2. கீரனூர் ஏரி
3. ஏமப்பேர் ஏரி
4. பசுங்காயமங்கலம் ஏரி
5. காரனூர் ஏரி
6. சித்தேரி
7. பெரிய ஏரி

மேற்காணும் இடங்கள் பொதுப்பணித்துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதால், அத்துறையின் அனுமதி பெற்று, திறந்தவெளி கிணறு அமைத்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளிலும், அந்தந்த வார்டுகளின் அத்தியாவசிய தேவையான குடிநீர் விநியோகத்தினை பூர்த்தி செய்திடும் வகையில், புதியதாக21 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைப்பதற்கு நகராட்சியின் நிதி நிலையை கருத்தில் கொண்டு முன்னுரிமையின் அடிப்படையில் பணிகளை தெரிவு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சியின் நிதி நிலமையினை கருத்தில் கொண்டு முன்னுரிமையின் அடிப்படையில் பணிகளை தெரிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 885/2022/இ1)**

**பொருள் எண். 04**

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில், மின்சாரத்தின் மூலம் இயங்கும் மின் சாதனங்களை சூரிய ஒளியின் (சோலார் பேனல்) மூலம் இயக்கி பராமரித்தால், நகராட்சி மூலம் மாதந்தோறும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்படும் மின் கட்டணம் குறைய வாய்ப்புள்ளது. எனவே, கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டடத்தின் மேல் பகுதிகளில் சூரிய ஒளி சக்தியில் இயங்கும் (Solar RoofTop) அமைப்புகள் (சோலார் பேனல்) ஏற்படுத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8,50,000/- (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாகஅனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 886/2022/இ1)

**பொருள் எண். 05**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் அடிப்படை வசதி பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் முக்கியமானதாக குடிநீர் வழங்கல் பணி உள்ளது. கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மணலூர்பேட்டை மற்றும் ரிஷிவந்தியம் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் நகராட்சிக்கு சொந்தமான 6 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு தினசரி 2.93 MLD குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால், பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பணி பாதிக்கப்படுகிறது. எனவே,உள்ளூர் நீர் ஆதாரங்களின் மூலம்இயங்கும் மின் மோட்டார்களை இயக்குவதற்கு, தானியங்கி மின்னனு கருவிகள் (Mobile Automatic Starter) மூலம் இயக்குவதற்கும், அதற்கான உபகரணங்களை பொருத்துவதற்கும் ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டும், முறையாக பயன்படுத்திடவும் இக்கருவியினை நீர் ஆதாரம் உள்ள அமைவிடங்களில் பொருத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 887/2022/இ1)**

**பொருள் எண். 06**

இந்நகராட்சி கள்ளக்குறிச்சி மாவட்டத்தின் தலைநகரத்தில் அமைந்துள்ள நகராட்சி என்பதால், இந்நகருக்கு பல்வேறு காரணங்களுக்காக தினசரி வந்து செல்லும் பொதுமக்கள் மற்றும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாகனங்களால், கள்ளக்குறிச்சி நகர பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, இதனை தவிர்க்கும் பொருட்டு, வாகன போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் எளிதாக நெருக்கடியின்றி வந்து செல்வதற்கு ஏதுவாக, கள்ளக்குறிச்சி ஏமப்பேர் கரியப்பாநகர் பள்ளிக்கூடத் தெரு, மவுண்ட் கார்மல் பள்ளி வழியாக (மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு வளாகம் அருகில்)கச்சிராயபாளையம் சாலை வழியாக இணைத்து ஒருவழி சாலையாக வாகன போக்குவரத்தினை, போக்குவரத்து காவல் துறையின் ஆலோசனை பெற்று மாற்றம் செய்வதன் மூலம் போக்குவரத்து நெரிசலை தடுக்கலாம். எனவே மேற்படி பணியினை மேற்கொள்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 888/2022/இ1)

**பொருள் எண். 07**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குதமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 6 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் நிரப்பபட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பபட்டு வருகிறது.குடிநீர் விநியோகம் செய்யப்படும் நேரம் குறித்து அனைத்து பகுதிபொது மக்களுக்கும் தெரிவிக்கும் வகையில் அந்தந்த மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலும், ஒலி பெருக்கி அமைப்பதற்கு ஏற்படும் தோராய செலவினம் ரூ.2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 889/2022/இ1)**

**பொருள் எண். 08**

கள்ளக்குறிச்சி நகராட்சி 2004-ம் ஆண்டு சிறப்பு நிலை பேரூராட்சியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.08.2021-ம் ஆண்டு, முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. கள்ளக்குறிச்சி நகராட்சி 15.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டு, 2011-ம்ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 52507 மக்கள் தொகையுடன் 21 வார்டுகளை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. தற்போதைய மக்கள் தொகை (தோராயமாக) 75000 எண்ணிக்கை கொண்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்ட தலைநகரத்தில் அமைந்துள்ள,கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் தற்போது குறைந்த அளவிலான அடிப்படை வசதிகள் உள்ளதால்,அப்பள்ளிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், கல்வி தரத்தை உறுதி செய்திடவும்,அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளையும் கள்ளக்குறிச்சி நகராட்சி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள ஏதுவாக, இந்நகர் மன்ற தலைவர் திரு. R.சுப்ராயலு அவர்களால் மாண்புமிகு திரு. எ.வ.வேலு, பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களிடம்அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவினைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் ந.க.எண். 2019/அ6/2021, நாள். 16.11.2021 தேதிய கடிதத்தில் நகராட்சி எல்லைக்குட்பட்ட, ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் பள்ளி கட்டிடங்களை கள்ளக்குறிச்சி நகராட்சியின் பராமரிப்பில் எடுத்துக்கொள்வதற்கு, கள்ளக்குறிச்சி நகராட்சி ஆணையரின் ஒப்புதலுடன் கூடிய கருத்துரு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் உரிய மேல்நடவடிக்கை தொடரும் என தெரிவித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளை நகராட்சி பள்ளியாக மாற்றம் செய்வதற்கும், பராமரிப்பதற்கும் மன்ற ஒப்புதல் பெற்று அரசின் அனுமதி ஆணை பெறுவதற்கு உரிய முன்மொழிவினைஅனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.** 890/2022/இ1)

**பொருள் எண். 09**

கள்ளக்குறிச்சி நகராட்சி 2004-ம் ஆண்டு சிறப்பு நிலை பேருராட்சியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.08.2021-ம் ஆண்டு, முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. கள்ளக்குறிச்சி நகராட்சி 15.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டு, 2011-ம்ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 52507 மக்கள் தொகையுடன் 21 வார்டுகளை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. தற்போதைய மக்கள் தொகை (தோராயமாக) 75000 எண்ணிக்கை கொண்டுள்ளது.

மேலும், இந்நகராட்சி மாவட்ட தலைநகரத்தில் அமைந்துள்ளது. கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதிகளில் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான பள்ளிகள், கட்டடங்கள் மற்றும் அசையா சொத்துக்களை நகராட்சியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் வழியாக முன்மொழிவினை அரசுக்கு அனுப்பிவைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 891/2022/இ1)**

**பொருள் எண். 10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 19829/2021/UGSS-1, நாள். 28.08.2021 ஆம் தேதிய கடிதத்தில், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடியால் வாரியம், சென்னை அவர்களிடம் கள்ளக்குறிச்சி நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், கள்ளக்குறிச்சி நகராட்சி மாவட்ட தலைநகரமாக உள்ளதால், நகரின் வளர்ச்சியினை மேம்படுத்திட நகரின் அனைத்து குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரினை பாதாள சாக்கடை மூலம் பாதுகாப்பான முறையில் சுத்திகரிப்பு செய்யும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகளை தமிழ்நாடு வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளவும், செயல்படுத்தவும் மற்றும் பாதாள சாக்கடை திட்ட பிரேரணைகள், மதிப்பீடுகள் தயார் செய்யப்படவும் உள்ளது.

தற்போது மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை அவர்களின் கடிதம் எண். F.Kallakurichi UGSS/AE 1/PDC/2021, நாள். 07.03.2022ல், மேற்படி பாதாள சாக்கடைத் திட்டப் பணிக்கான ஆய்வு கட்டணம் ரூ. 96.00 இலட்சத்தினை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் மன்றம்

அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2226/2021/இ1)**

**பொருள் எண். 11**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 கச்சிராயபாளையம் சாலை விளாந்தாங்கல் ஏரியில் இந்நகராட்சியின் மூலம் குடிநீர் விநியோகத்திற்காக அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வந்த மின் மோட்டார், தற்போது பழுதடைந்து, உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இந்நிலையில், அம்மின் மோட்டாரிலிருந்து வார்டு எண். 01, 13 மற்றும் 14 பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே, மேற்படி பழுதடைந்துள்ள மின் மோட்டார் மற்றும் அதற்கான இதர உபகரணங்களான பைப், கேபிள் மற்றும் இதரவைகளை புதியதாக மாற்றப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருதி, விளாந்தாங்கல் (காரனூர்) ஏரியில் உள்ள மின் மோட்டார் மற்றும் அதற்கான இதர உபகரணங்களை மாற்றி பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 892/2022/இ1)**

**பொருள் எண். 12**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கோழி இறைச்சி கடைகள் நடத்துவோர்கள், இறைச்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை திறந்த வெளியில் ஆங்காங்கே கடை உரிமையாளகள் வீசி செல்வதால், பொதுசுகாதார பாதிப்புகள் ஏற்படுகிறது. இதனை தடுக்கும் வகையில், கோழி இறைச்சி கழிவுகளை ஒரு பாதுகாப்பான இடத்தில் முறைப்படுத்தி, அவற்றை இயற்கை உரமாக மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான இடத்தினை தேர்வு செய்யவும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 893/2022/எச்1)**

**பொருள் எண். 13**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், சாலையின் இருபுறங்களிலும், ஆங்காங்கே இறைச்சி கடைகள், மீன் கடைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டு வியாபாரம் செய்து வருகின்றனர். இதனால் சாலையின் இருபுறங்களிலும் ஆங்காங்கே பொது சுகாதார கேடு ஏற்படுவதோடு, சாலையில் செல்லும் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் முகம் சுழிக்கும் விதமாக உள்ளது. இதனை முறைப்படுத்தும் வகையில், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒருங்கிணைந்த இறைச்சி மற்றும் மீன் விற்பனை கூடம் அமைப்பதற்கு இடத்தினை தேர்வு செய்யமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 894/2022/எச்1)**

**பொருள் எண். 14**

கள்ளக்குறிச்சி நகராட்சி முதல் நிலை நகராட்சியாக அரசாணை (நிலை) எண். 154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 09.08.2010 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சி மாவட்ட தலைநகரத்தில் அமைந்துள்ளது. இந்நகராட்சிக்கு என இறைச்சி கூடம் ஏதும் இல்லாததால், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆங்காங்கே சாலையின் இருபுறங்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளில் அதிக அளவில் இறைச்சி கடைகள் நடத்தப்பட்டு வருகிறது. இதனால், சாலையில் பொது சுகாதார சீர்கேடு ஏற்படுவததோடு, போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது.

எனவே, இதனை தவிர்த்திடும் வகையில், கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைகுட்பட்ட சேலம் பிரதான சாலை, கச்சிராயபாளையம் சாலை மற்றும் துருகம் பிரதான சாலையின் இருபுறங்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளில் இறைச்சி கடைகளை மேற்கண்ட சாலைப்பகுதிகளில் ஒரே இடத்தில் நடத்திட உரிய இடத்தினை தேர்வு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 895/2022/இ1)**

**பொருள் எண். 15**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தினசரி இறைச்சி மற்றும் மீன் கடைகள் நடத்தி வரும் வியாபாரிகள், இறைச்சி மற்றும் மீன் கடைகள் நடத்திட தனி இடம் இல்லாத காரணத்தினால், சாலைகளின் ஓரங்களில் ஆங்காங்கே கடை நடத்தி வருவதால், சாலைகளில் பொது சுகாதார சீர்கேடு ஏற்படுவதோடு, போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது.

மேலும் தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட / இறந்த ஆடுகளை விற்பனைக்கு வருவதை தடுக்கும் வகையில், கால்நடை மருத்துவரை நியமனம் செய்து, இறைச்சிக்கு வரும் ஆடுகளை பரிசோதனை செய்து எவ்வித நோய் தொற்று பாதிப்பும் இல்லை என உறுதி செய்யப்பட்டபின்னர் விற்பனைக்கு கொண்டுவதற்கும், இறைச்சி மற்றும் மீன் கடைகளை நிரந்தரமாக ஒரே இடத்தில் அமைத்து, கடைகளை நடத்துவதற்கு தனியாக இடத்தினை தேர்வு செய்யவும் மன்றம் ஆலோசித்து முடிவெடுக்கலாம்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 896/2022/இ1)**

**பொருள் எண். 16**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான தினசரி நாளங்காடி சேலம் பிரதான சாலை நான்கு முனை சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ளது. இந்த தினசரி நாளங்காடியில் சுமார் 263 கடைகள் நகராட்சி மூலம் கட்டப்பட்டு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேலும் அம்மா உணவக கட்டடம் இந்நாளங்காடி வளாகத்தினுள் செயல்பட்டு வருகிறது. மேற்படி, நாளங்காடிக்கு வரும் பொதுமக்கள் தங்களது இரு சக்கர வாகனங்களை பிரதான சாலையின் ஓரத்திலேயே நிறுத்தி விட்டு செல்வதால், அப்பகுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதோடு, நாளங்காடிக்கு வரும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். இதனை தவிர்க்கும் விதமாக தினசரி நாளங்காடியில் காலியாக உள்ள இடத்தில் இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கவும், இதன் மூலம் நகராட்சியின் வருவாயினை பெருக்கிடவும் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தினசரி நாளங்காடியில் புதியதாக இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்து, இதன் மூலம் போக்குவரத்து நெரிசலை குறைத்திடவும், நகராட்சியின் வருவாயினை பெருக்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.** 897/2022/இ1)

**பொருள் எண். 17**

கள்ளக்குறிச்சி நகராட்சி 2004-ம் ஆண்டு சிறப்பு நிலை பேருராட்சியிலிருந்து மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.08.2021-ம் ஆண்டு முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. கள்ளக்குறிச்சி நகரம் 15.87 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும் ஆகும்.2011-ம்ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 52507-ம் தற்போதைய மக்கள் தொகை (தோராயமாக) 75000. எண்ணிக்கை கொண்டுள்ளது.

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகம் 2004-ம் ஆண்டு முதல், தற்போது பேருந்து நிலையம் உள்ள இடத்தில் இயங்கி வந்த நிலையில், பேருந்து நிலையம் விரிவாக்கத்தின் போது அகற்றப்பட்டு தற்போது நகராட்சி எல்லைக்குட்பட்ட அண்ணாநகர் பகுதியில் உள்ள நகராட்சி திருமண மண்டப கட்டிடத்தில் 2010 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது அலுவலகம் உள்ள கட்டிடத்தில் அலுவலர்களின் அறைகள், அனைத்து பிரிவுகளின் அறைகள், நகர்மன்ற கூட்ட அறை மற்றும் கோப்புகள் இருப்பு அறை என அலுவலகம் செயல்படுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதி மற்றும் இடவசதியும் இல்லாத காரணத்தினாலும், கட்டிடத்தின் பல பகுதிகள் சேதமடைந்துள்ளதாலும், கள்ளக்குறிச்சி மாவட்ட தலைநகரில் அமையப்பட்டுள்ள நகராட்சி என்பதாலும் நவீன வசதிகளுடன் கட்டிடத்தை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, தற்போதுநகராட்சி அலுவலகம் செயல்பட்டு வரும் இடத்தின் வளாகப் பகுதியிலேயே புதிய நகராட்சி அலுவலகம் அமைக்கலாம். எனவே புதிய அலுவலக கட்டிடம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ. 500.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி மற்றும் தேவையான நிதியினை முழு மான்யமாக வழங்க வேண்டி திட்டபிரேரணையை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தற்போது இயங்கி வரும் நகராட்சி அலுவலக கட்டடத்தினை நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில், வாடகை / குத்தகை அடிப்படையில் வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்திடவும், ஏற்கனவே உள்ள நகராட்சி அலுவலக வளாகப் பகுதியில் புதிய நகராட்சி அலுவலகம் கட்டுவதற்கான திட்டப் முன்மொழிவு சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி புதிய நகராட்சி அலுவலகம் கட்டுவதற்கான தொகையினை முழு மான்யமாக பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 581/2022/இ1)**

**பொருள் எண். 18**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 07ல், கோட்டைமேடு நந்தவனம் பகுதியில் (ஆற்றுக்கு செல்லும் சாலை) தொன்று தொட்டு இந்நகரப் பொதுமக்கள் இறந்தவர்களின் ஆன்மா சாந்தி அடையும் பொருட்டு, நீத்தார் இறுதி சடங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி பகுதியில் இறுதி சடங்கு செய்வதற்கான மண்டபம் இந்நகராட்சியின் மூலம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால், அப்பகுதியில் தண்ணீர் வசதியுடன் கூடிய குளியலறை மற்றும் இதர அடிப்படை வசதிகள் ஏதும் இல்லாததால், நந்தவனத்திற்கு இறுதி சடங்கு செய்ய வருபவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, கோட்டைமேடு நந்தவனத்தில் புதியதாக, தண்ணீர் வசதியுடன் கூடிய குளியலறை மற்றும் இதர வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, வார்டு எண். 07, கோட்டைமேடு நந்தவனம் பகுதியில் புதியதாக தண்ணீர் வசதியுடன் கூடிய குளியலறைமற்றும் இதர வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 6,00,000/- (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.** 898/2022/இ1)

பொருள் எண். 19

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் தள்ளு வண்டிகளில் (Push Carts), தற்போது தள்ளு வண்டிகளின் சக்கரங்கள், பேரிங், புஷ், அடித்தகடு, சைடு தகடு மற்றும் இதர உபகரணங்கள் பழுதடைந்து வண்டியினை இயக்குவதற்கு மிகுந்த சிரமமாக உள்ளதால், திடக்கழிவு மேலாண்மை பணியான குப்பைகளை தரம் பிரித்து வாங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, மேற்படி பழுதடைந்துள்ள தள்ளு வண்டிகளை (Push Carts) பழுது நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ. 2,00,000/- (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியத்தினை கருதி விலைப்புள்ளிகள் பெற்று பழுது நீக்க பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 899/2022/எச்1)**

பொருள் எண். 20

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியான, குப்பைகளை தரம் பிரித்து பெறப்படும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் மின்கலனில் இயங்கும் வாகனங்களில் (BoV) ஏற்பட்டுள்ள பழுதுகளால் வாகனத்தினை இயக்குவதற்கு மிகுந்த சிரமமாக உள்ளது. இதனால் திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, மேற்படி பழுதடைந்துள்ள மின்கலன் வாகனங்களை (BoV) பழுது நீக்கம் செய்து. பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ. 3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியத்தினை கருதி விலைப்புள்ளிகள் பெற்று பழுது நீக்க பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 900/2022/எச்1)**

**பொருள் எண். 21**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையுள்ள பகுதிகளில் 114 எண்ணிக்கையிலான சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர், குடிநீர் பகிர்மான குழாய்களுக்கும் கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேன் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

அனைத்து நகராட்சிகளும் குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இல்லாமல் தண்ணீர் வழங்க வேலூர் மண்டல இயக்குநர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், குடிநீர் விநியோக பணி நகராட்சியின் மிக முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலசட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 901/2022/இ1)**

**பொருள் எண். 22**

உலக பொதுமறையாக போற்றப்படுவதும், மனித குலத்தின் மாண்பினையும் வாழ்கை நெறிமுறைகளையும் 1330 குறட்பாக்களில் உலக வாழ்கையை உள்ளடக்கி ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் உள்ள அனைவரும் நன்கறிந்த திருக்குறளின் அருமை பெருமைகளை அலுவலர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் போன்றோர்கள் அறிந்துகொள்ளும் வகையில், கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் கல்லை தமிழ் வளர்ச்சி சங்கத்தின் சார்பாக, தினம் ஒரு திருக்குறள் என்ற தலைப்பில், இந்நகராட்சியில் பெயர் பலகை அமைத்து, அதில் தினமும் பொருள் விளக்கத்துடன் கூடிய திருக்குறளினை அச்சங்கத்தினர் வாயிலாக எழுதி, அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் திருக்குறள் விழிப்புணர்வு பணிசெய்து வரும் கல்லை தமிழ் வளர்ச்சி சங்கத்திற்கு நகர் மன்றத்தின் சார்பாக நன்றி தெரிவிப்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. உலக பொதுமறையாக போற்றப்படும் அய்யன் திருவள்ளுவரால் படைக்கப்பட்ட திருக்குறளை தெரிந்துகொள்ளும் வகையில் கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தின் முன்புற பகுதியில் கல்லை தமிழ் வளர்ச்சி சங்கத்தின் சேவையை பாராட்டி மன்றத்தில் பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 23**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் 89 எண்ணிக்கையிலான சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர், குடிநீர் பகிர்மான குழாய்களுக்கும் கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேன் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

அனைத்து நகராட்சிகளும் குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இல்லாமல் தண்ணீர் வழங்க வேலூர் மண்டல இயக்குநர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், குடிநீர் விநியோக பணி நகராட்சியின் மிக முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலசட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 903/2022/இ1)**

**பொருள் எண். 24**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் 105 எண்ணிக்கையிலான சிறுமின் விசைப்பம்புகள் உள்ளன. இதனை பொதுமக்கள் அன்றாட தேவைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் சில ஆழ்துளை கிணறுகளிலிருந்து தண்ணீர், குடிநீர் பகிர்மான குழாய்களுக்கும் கொண்டு சென்று விநியோகம் செய்யப்படுகிறது. இந்த அமைப்பில் மோட்டார், குழாய்கள், பேன் போர்டுகள், கன்டன்சர், பி.வி.சி. மேல் தொட்டிகள் மற்றும் உபகரணங்கள் உள்ளன. இவற்றில் ஏதேனும் பழுதடைந்தால் இதனை உடனடியாக சரிசெய்யும் பணி மிகவும் அவசியமாகிறது.

அனைத்து நகராட்சிகளும் குடிநீர் வழங்குவதில் எந்தவித இடையூறும் இல்லாமல் தண்ணீர் வழங்க வேலூர் மண்டல இயக்குநர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அவ்வப்போது அறிவுரை வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், குடிநீர் விநியோக பணி நகராட்சியின் மிக முக்கிய பணிகளில் ஒன்றாகவும் உள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகளில் உதிரி பாகங்களுடன் கூடிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. எதிர்வரும் கோடை காலத்தில் ஏற்படும் வறட்சியினை எதிர்கொள்ள இப்பணிகளின் முக்கியத்துவத்தினை கருதி, தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,95,000/- (ரூபாய் ஒன்பது இலசட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 904/2022/இ1)**

**பொருள் எண். 25**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகர் மன்ற தலைவர், நகர் மன்ற துணை தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், நகர் மன்ற கூட்டம் நடைபெறும் பொழுதுபின்பற்றப்பட வேண்டிய கூட்ட நடவடிக்கைவிதிமுறைகள், அறிவுரைகள் மற்றும் மன்ற கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்தல் குறித்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 46406/2009/M3, நாள். 26.09.2009-ஐ மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 905/2022/இ1)**

**பொருள் எண். 26**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வார்டு எண். 01 முதல் 21 வரையுள்ள நகர் மன்ற உறுப்பினர்கள், தங்களது வார்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான குடிநீர் விநியோகம், தெருமின் விளக்கு, சாலைகள் அமைத்தல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு கொடுக்கப்பட்டுள்ள கடிதத்தினை, நகர் மன்றம் பார்வையிட்டு, பரிசீலனை செய்து,நகர் மன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்படும் பணியினை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து, அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சியின் நிதி நிலமையினை கருத்தில் கொண்டு நகர் மன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் அத்தியாவசிய முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்து, மதிப்பீடுகள் தயார் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.906/2022/இ1)**

**பொருள் எண். 27**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 20496/2021/எம்3, நாள். 02.03.2022ல், மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், பணிகள், கணக்குகள், நிதி மாற்றம், மன்ற தீர்மானங்கள், மன்ற கூட்ட நடவடிக்கைகள், பட்டியல் தொகை வழங்குதல், வரவு / செலவு திட்ட மதிப்பீடு (Budjet) மற்றும் அலுவலக நடைமுறைகள் குறித்த சுற்றறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 907/2022/இ1)**

**பொருள் எண்.	28**

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் ஏற்கனவே திருமண மண்டபமாக இருந்து, 2010 முதல் நகராட்சி அலுவலக கட்டிடமாக செயல்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்தில் தலைவாயில் (Portico) இல்லாமலும், படிக்கட்டுகள், சாய்தளம் மற்றும் சிறு பூங்கா போன்ற அமைப்புகளால் நகராட்சிக்கு வரும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கொண்டு வரும் வாகனங்களை முறையாக நிறுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும், மழைக்காலங்களில் மழைச்சாரல் அலுவலக உட்புறம் வருகின்றது. இதனால் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி இடற்பாடுகளை களையும் வண்ணம், நகராட்சி அலுவலக கட்டிடத்தினை மேம்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

எனவே, இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் தலைவாயில் (Portico)புதியதாக அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,60,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண்.908/2022/இ1)**

**பொருள் எண்.	29**

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் ஏற்கனவே திருமண மண்டபமாக இருந்து, 2010 முதல் நகராட்சி அலுவலக கட்டிடமாக செயல்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்தின் முன்புற நுழைவாயில் சாலையானது தார்சாலையாகவும், மேற்படி சாலை போடப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கும் மேல் ஆவதால், தார்சாலை முற்றிலும் பழுதடைந்துள்ளது. இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமும் அமைந்துள்ளது. இதனால் நகராட்சி அலுவலகத்திற்கு வரும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் நோயாளிகள், கர்ப்பிணிகள் மற்றும் பொதுமக்கள் மேற்படி சாலையினை பயன்படுத்துவதற்கு மிகுந்த சிரமமாக உள்ளது. மேற்படி சாலையானது அலுவலகத்தின் நுழைவு சாலையாக உள்ளதால் மேற்படி சாலையினை மேம்படுத்திட வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எனவே, மேற்படி நகராட்சி அலுவலகத்தின் நுழைவு சாலையில் பேவர் பிளாக் சாலையாக அமைத்திட தயார் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,85,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து என்பத்தி ஐந்தாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

( **ந.க.எண்.**909/2022/**இ**1)

**பொருள் எண். 30**

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக கட்டிடம் ஏற்கனவே திருமண மண்டபமாக இருந்து, 2010 முதல் நகராட்சி அலுவலக கட்டிடமாக செயல்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்தின் முகப்பு பகுதியில் நகராட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வாகனங்கள் நிறுத்திடமாக உள்ளது. நகராட்சி அலுவலகத்தின் முன்புறம் உள்ள சாலையானது தார்சாலையாகவும், மேற்படி சாலை போடப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கும் மேல் ஆவதால், தார்சாலை முற்றிலும் பழுதடைந்து மழைநீர் வெளியேறாமல் ஆங்காங்கே தேங்கியுள்ளது. இதனால், மழைக்காலங்களில் இந்நகராட்சிக்கு வருகைபுரியும் உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் மழைநீர் தேங்கி உள்ளது.

இந்நகராட்சி அலுவலகத்தின் முன்புறம் பேவர் பிளாக் சாலையாக மாற்றி அமைத்து மழைநீர் தேங்கா வண்ணம் பணிகள் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும். எனவே, நகராட்சி அலுவலகத்தின் முன்புறம் பேவர் பிளாக் சாலையாக அமைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,90,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.910/2022/இ1)**

**பொருள் எண். 31**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-2022ன் கீழ், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண். 151/2 ஏமப்பேர் பகுதியில் புதியதாக நவீன LPG எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ரூ. 148.58 இலட்சம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு பெற்று, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி துவங்கப்படவுள்ளது. மேற்படி பணிக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் Cencern to Estabish சான்று பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

எனவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் சான்று பெறுவதற்கான பணிகளை மேற்கொள்ளவும், அத்துறையினருக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை செலுத்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சான்று பெற, பெறப்படும் கேட்புகளின் அடிப்படையில் தொகையினை செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 911/2022/இ1)

**பொருள் எண். 32**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், வார்டு எண். 13, டி.எம்.எஸ். நகர் பூங்காவினை தற்போது நடைபாதையுடன் கூடிய மரங்கள், செடிகளுடன் பசுமையினை பேனிகாத்திடும் வகையில் மரங்களுக்கு தொடர்ச்சியாக தண்ணீர் ஊற்றி பராமரித்திடவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணிக்காக டி.எம்.எஸ். நகர் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு பழுதடைந்து உள்ளதால், பழுதடைந்த ஆழ்துளை கிணற்றினை பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு, புதியதாக மின் மோட்டார் அமைத்து, சிறிய குடிநீர் தொட்டி மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேற்படி பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 912/2022/இ1)**

**தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது, நாள்.28.03.2022**

**அனுமதிக்கப்பட்டது.**

ஒம் (xxxxxxxxxxxx)

**திரு.இரா.சுப்ராயலு,**

**//உண்மை நகல்//** நகர்மன்ற தலைவர்

கள்ளக்குறிச்சி நகராட்சி

**ஆணையாளர்**

**கள்ளக்குறிச்சி நகராட்சி**